# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 26, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழ்நாடு மின் வாரியத்தின் கடன் தொகை ரூ.2.47 லட்சம் கோடியாக இருப்பதாக மின் துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(i) மின்வாரியத்தில் 65,921 காலிப் பணியிடங்கள் இருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

(ii) மின்வாரிய நிதிநிலை, வருவாய்- செலவினம், கடன்சுமை, மின்கொள் முதல் நடைமுறைகள் உள்ளிட்ட விவரங்களை விளக்கும் வெள்ளை அறிக்கையை மின்வாரிய தலைமை அலுவலகத்தில் மின் துறை அமைச்சர் நிர்மல்குமார் வெளியிட்டார்.

2. தீஸ்தா நதி மேலாண்மை உள்ளிட்ட விவகாரங்களில் இருதரப்பு உறவை மேம்படுத்தும் வகையில், சீனா- வங்கதேசம் இடையே 13 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

3. ரஷிய போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைனின் மறுசீரமைப்புப் பணிகளுக்காக, ஐரோப்பிய யூனியன் உறுதியளித்த கடனுதவியில் முதல் தவணையாக 300 கோடி யூரோ விடுவிக்கப்பட்டது.

4. ஜிம்பாப்வேயில் தற்போதைய அதிபரின் பதவிக்காலத்தை நீட்டித்து, அதிபர் தேர்தலை ஒத்திவைக்க வழிவகை செய்யும் சட்டத் திருத்த மசோதாவுக்கு அந்நாட்டு செனட் சபை ஒப்புதல் அளித்தது.

5. ஆந்திரத்தில் 400 மெகாவாட் காற்றாலை மின் திட்டத்தை அமைப்பதற்கான புதிய ஒப்பந்தத்தை (ஆர்டர்) டாடா பவர் நிறுவனத்திடமிருந்து பெற்றுள்ளதாக சுஸ்லான் நிறுவனம் அறிவித்தது.

(i) புணேவைத் தலைமையிட மாகக்கொண்ட சுஸ்லான் நிறுவனம், உலக அளவில் 17 நாடுகளில் 21.7 கிகாவாட் காற்றாலை மின் திறனை இதுவரை நிறுவியுள்ளது. இப்புதிய ஆர்டரின் மூலம், ஆந்திரத்தில் மட்டும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த ஆர்டர் மதிப்பு 1 கிகாவாட்டாக அதிகரித்துள்ளது.

(ii) இதேபோல், தமிழகம், கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் டாடா பவர் மற்றும் சுஸ்லான் நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டுப் பங்களிப்பு ஒட்டுமொத்தமாக 1 கிகாவாட் என்ற மைல்கல்லைக் கடந்துள்ளது.

(iii) புதிய ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, சுஸ்லான் நிறுவனம் தலா 3.15 மெகாவாட் திறன் கொண்ட 127 அதிநவீன 'எஸ்144' ரக காற்றாலை மின்சார ஜெனரேட்டர்களை நிறுவவுள்ளது.

(iv) இதற்கான நிலம் கையகப்படுத்துதல், ஆலை உள்கட்டமைப்பு வசதிகள், கூடுதல் உயர் அழுத்த மின் பாதை அமைத்தல், மின் உற்பத்தித் தொடக்கம், அதற்கு பிந்தைய இயக்கம் மற்றும் பராமரிப்புச் சேவைகள் ஆகிய அனைத்துப் பணிகளையும் சுஸ்லான் நிறுவனமே முழுப் பொறுப்பேற்றுச் செய்து முடிக்கவுள்ளது.

6.தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் புதன்கிழமை மாலை (உள்ளூர் நேரப்படி) அடுத்தடுத்து 2 சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டு, அந்நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன.

(i) இந்த இயற்கைப் பேரிடரில் சிக்கி இதுவரை 188 பேர் உயிரிழந்துள்ளனர்; சுமார் 1,000 பேர்

காயமடைந்துள்ளனர். இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியுள்ள 200-க்கும் மேற்பட்டவர்களை மீட்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

(ii) வெனிசுலாவின் கரீபியன் கடற்கரை பகுதியில் உள்ள மோரோன் நகருக்கு அருகே மையம்கொண்டிருந்த இந்த நிலநடுக்கங்கள், ரிக்டர் அளவுகோலில் 7.2 மற்றும் 7.5 அலகுகளாகப் பதிவாகின. கடந்த ஒரு நூற்றாண்டில் வெனிசுலாவில் ஏற்பட்ட மிக மோசமான நில நடுக்கங்களாக இவை கருதப்படுகின்றன.

(iii) நாட்டின் முக்கிய விமான நிலையமான சைமன் பொலிவார் சர்வதேச விமான நிலையம் நிலநடுக்கத்தினால் சேதமடைந்து, மூடப்பட்டுள்ளது. தலைநகர் கராகஸின் பல பகுதிகளில் மின்சாரம், தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

7. அண்டைநாடான பூடான் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் 5- ஆவது தவணையாக ரூ.250 கோடியை அந்நாட்டுக்கு இந்தியா வழங்கியுள்ளது.

(i) பூடான் பொருளாதார ஊக்குவிப்புத் திட்டத்துக்கு ரூ.1,500 கோடி வழங்க இந்தியா உறுதிய ளித்திருந்தது.

(ii)இதுவரை ரூ.1,250 கோடி வழங்கப்பட்டுள்ளது. பூடானுக்கு பல்வேறு வகைகளில் இந்தியா தொடர்ந்து உதவி வருகிறது. அந்நாட்டின் 2026-27 பட்ஜெட்டில் 30 சதவீதத்துக்கு மேலான மூலத்னச் செலவுகள் இந்தியா வழங்கும் மானிய உதவிகள் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன.

(iii) பூடான் தலைநகர் திம்புவில் உள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்ட செய்தியில், 'திம்புவில் பூடானுக்கான இந்தியத் தூதர் சந்தீர் ஆர்யா, அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் லியோன்போ டி.என்.துங்யல்லிடம் ரூ.250 கோடிக்கான காசோலையை வழங்கினார். இது கரோனா முடக்கத்தால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு மற்றும் வேலைவாய்ப்புக்கு உதவும். நாட்டின் பல்வேறு தரப்பினருக்கும், சுற்றுலா மேம்பாட்டுக்கும் உதவும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. உளவுத் துறையின் (ஐபி) புதிய தலைவராக மூத்த ஐபிஎஸ் அதிகாரி மகேஷ் தீட்சித்தை மத்திய அரசு நியமித்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(i) உள்நாட்டில் உளவு பார்க்கும் பணிகளை ஐபி மேற்கொள்கிறது. தற்போது அந்தத் துறையின் தலைவராக தபன்குமார் டேக்கா பதவி வகித்து வருகிறார். இந்நிலையில், அந்தத் துறையின் தலைவராக மகேஷ் தீட்சித்தை நியமிக்க பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவை நியமனங்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

(ii) 1993-ஆம் ஆண்டின் ஆந்திர பிரிவு ஐபிஎஸ் அதிகாரியான அவர், ஐபி-யின் சிறப்பு இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். ஜம்மு- காஷ்மீர் உளவுத் துறை தலைவராக செயல்பட்ட பரந்த அனுபவம் அவருக்கு உள்ளது என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

9. 'கடவுச்சீட்டு (பாஸ் போர்ட்) ஒருபோதும் குடியுரிமை ஆவணமாக கருதப்படாது. இந்த ஆவணம் தொடர்பாக எந்தவொரு புதிய முடிவையும் மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளில் எடுக்கவில்லை' என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

(i) 'கடவுச்சீட்டு பயண ஆவணம் மட்டுமே; குடியுரிமக்கான ஆதாரம் அல்ல' என்று வெளியுறவு அமைச்சகம் அண்மையில் குறிப்பிட்டது, அரசியல் ரீதியில் பெரும் விவாதத்தை ஏற்படுத்திய நிலையில், இந்த விளக்கத்தை மத்திய அரசு அதிகாரிகள் அளித்தனர். இதுகுறித்து மத்திய அரசு வட்டாரங்கள் மேலும் கூறியதாவது:

- கடவுச்சீட்டு சட்டம் 1967-இன்படி, ஒரு நாட்டில் குடியுரிமை இல்லாதவர்களுக்கும் கடவுச்சீட்டை வழங்க முடியும். ஏனெனில், கடவுச்சீட்டு ஓர் பயண ஆவணம் மட்டுமே. குடியுரிமைக்கான ஆதாரம் அல்ல. மேலும், கடவுச்சீட்டு குடியுரிமை ஆவணம் அல்ல

என்பது, கடந்த 12 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. அந்த வகையில், இது ஒருபோதும் குடியுரிமை ஆவணமாகக் கருதப்படவில்லை என்று தெரிவித்தனர்.

- கடவுச்சீட்டு குடியுரிமை ஆவணம் அல்ல என்பதை மும்பை உயர்நீதிமன்றம் 2013-இல் அளித்த தீர்ப்பில் தெளிவு படுத்தியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
- தேர்தல் ஆணையம் மேற்கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின்போது (எஸ்ஐஆர்), ஆதார் குடியுரிமை ஆவணம் அல்ல; அடையாள ஆவணம் மட்டுமே என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியது. தற்போது கடவுச்சீட்டும் குடியுரிமை ஆவணம் அல்ல என்பதை மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

10.அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தில் ரேஷன் அட்டைதாரர்களுக்கு நபர் ஒருவருக்கு மாதம் 7 கிலோ இலவச உணவு தானியம் வழங்குவது குறித்து மத்திய அரசு பரிசீலித்துவருகிறது. இதுகுறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது:

(i) வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு, அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தில் ரேஷன் பொருள்கள் அளிக்கப்படுகின்றன. தற்போது மாதத்துக்கு 35 கிலோ அரிசி அல்லது கோதுமை இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த முறையில் மாற்றங்களைச் செய்வது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

(ii) அதாவது, அந்தத் திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு தலா 7 கிலோ உணவு தானியம் அளிக்க மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. இதன்படி, 2 பேர் மட்டுமே கொண்ட குடும்பம் எனில் தலா 7 கிலோ விதம் மொத்தம் 14 கிலோ இலவச உணவு தானியமும், 5 அல்லது அதற்கு மேல் உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்துக்கு மாதம் அதிகபட்சம் 35 கிலோ இலவச உணவு தானியமும் வழங்க மத்திய அரசு யோசித்து வருகிறது. இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு, கடந்த 2013-ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை பரிசீலித்து வருகிறது. இந்தத் திருத்தம் குறித்து ஜூலை மாதம் 13- ஆம் தேதிக்குள் கருத்து தெரிவிக்கலாம் என்று பொதுமக்களை மத்திய உணவு அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

(iii) இந்த சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு அமலுக்கு வந்தால், தற்போது ரேஷனில் அந்தியோதயா அன்னயோஜனதா திட்டத்தில் மாதந் தோறும் வழங்கப்படும் 35 கிலோ இலவச உணவு தானியம் நிறுத்தப்படும். அதற்குப் பதிலாக, நபர் ஒருவருக்கு தலா 7 கிலோ வீதம் எனக் கணக்கிடப்பட்டு இலவச உணவு தானியம் விநியோகிக்கப்படும்.

(iv) அப்போது 5 உறுப்பினர்களுக்கும் குறைவாக உள்ள சிறிய குடும்பங்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உணவு தானியம் வழங்கப்படும் என்பதால், அவர்களுக்கான இலவச உணவு தானியத்தின் அளவு குறையக் கூடும்.

(v)ஆனால் அதே நேரத்தில் 5 அல்லது அதற்கு அதிக உறுப்பினர்களை கொண்ட குடும்பத்தினருக்கு 35 கிலோ இலவச உணவு தானியம் தொடர்ந்து அளிக்கப்படும்.

11. ஹப் அண்ட் ஸ்போக் எனும் புதிய முன்னெடுப்பின்கீழ், உத்தரபிரதேச மாநிலம், வாரணாசியில் இருந்து தில்லி வழியாக ஒருங்கிணைந்த சர்வதேச விமான சேவைகள் தொடங்கப்பட்டன.

(i) ஏர் இந்தியா நிறுவனம் சார்பில் தொடங்கப்பட்ட இந்தச் சேவைக்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். இது, நாட்டின் பிராந்திய நகரங்களுக்கு புதிய உலகளாவிய வாய்ப்புகளைக் கொண்டுவரும் - என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

(ii) நாட்டின் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களில் இருந்து சர்வதேச நகரங்களுக்கு தடையற்ற, எளிதான விமானப் போக்குவரத்தை உறுதி செய்யும் நோக்கில், விமான நிறுவனங்களுடன் இணைந்து மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் 'ஹப் அண்ட் ஸ்போக் (முக்கிய -பிராந்திய விமான நிலையங்கள்

ஒருங்கிணைப்பு) என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

(iii) அதன்படி பிராந்திய விமான நிலையங்களில் இருந்து நாட்டின் முக்கிய விமான நிலையங்களுக்கு விமானங்கள் இயக்கப்படும். பிராந்திய விமான நிலையங்களிலேயே பெரும்பாலான நடைமுறைகள் நிறைவடைந்து விடுவதால், முக்கிய விமான நிலையத்தை அடைந்தபின் அங்கிருந்து எளிதாக சர்வதேச விமானப் பயணத்தை மேற்கொள்ளலாம்.

(iv) இந்தப் புதிய முன்னெடுப்பின் கீழ், முதலாவதாக உத்தர பிரதேச மாநிலம், வாரணாசியில் இருந்து தில்லி வழியாக சர்வதேச நகரங்களுக்கான விமான சேவைகளை ஏர் இந்தியா தொடங்கியது. வாரணாசி விமான நிலையத்தில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் பிரதமர் மோடியின் உரை வாசிக்கப்பட்டது.

(v) 'ஹப் அண்ட் ஸ்போக் முன்னெடுப்பு, நாட்டின் விமானப் போக்குவரத்து வரலாற்றில் புதிய மைல்கல். சிறப்பான சர்வதேச இணைப்பு இருந்தால், வர்த்தகம், சுற்றுலா, முதலீடு, கல்வி, வர்த்தகத் துக்கான புதிய வாய்ப்புகள் உருவாகும். புதிய முன்னெடுப்பின்கீழ், சிறிய நகரங்களைச் சேர்ந்த மக்கள், ஒருங்கிணைந்த விமானப் பயணத்தின் மூலம் சர்வதேச நகரங்களை அணுக முடியும். சரக்குப் போக்குவரத்தும் மேம்படுவதால், பிராந்திய வளர்ச்சிக்கு பங்களிப்பதுடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சி வலுப்படும்.

(vi) சிறிய நகரங்களில் இருந்து சர்வதேச நகரங்களுக்கான விமானப் பயண நேரம் குறைவதுடன், பிராந்திய பகுதிகளுக்கு உலகளாவிய வாய்ப்புகளைக் கொண்டுவரும்; தற்போதுள்ள விமான நிலைய கட்டமைப்பை மேலும் திறம்பட பயன்படுத்த உதவும்.

(vi) உலகின் மிகப்பழைமையான நகரங்களில் ஒன்றாகவும், நாட்டின் வளமான நாகரிக பாரம்பரியத்தின் அடையாளமாகவும் விளங்கும் வாரணாசி, வளர்ச்சி-பாரம் பரியம் இணைந்த நமது தொலைநோக்குப் பார்வையை பிரதிபலிக்கிறது. வாரணாசியின் தனித்துவமான அடையாளத்தைப் பாதுகாக்கும் அதேவேளையில், உலகத்துடனான அதன் தொடர்பை வலுப்படுத்துவதில் இத்தகைய முன்னெடுப்பு மிக முக்கியமானது என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

(vii) விமானப் போக்குவரத்துச் சந்தையில் உலக அளவில் மிக வேகமாக வளரும் நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குவது குறிப்பிடத்தக்கது.

12. பிரபல இணையவழி வர்த்தக நிறுவனமான அமெரிக்காவின் அமேசான் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) ஆண்டி ஜாசி, பிரதமர் நரேந்திர மோடியை தில்லியில் சந்தித்துப் பேசினார்.'

(i) அப்போது அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.), கிளவுட் கம்ப்யூட்டிங், பொழுதுபோக்குத் துறைகளில் சுமார் 1.22 லட்சம் கோடி (13 பில்லியன் டாலர்) கூடுதல் முதலீடு செய்ய இருப்பதாகவும், இதன்மூலம் 2026-2030 கால கட்டத்தில் இந்தியாவில் அமேசான் முதலீடு ரூ.4.52 லட்சம் கோடியாக (48 பில்லியன்) அதிகரிக்க இருப்பதாகவும் அமேசான் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

13. பிரிட்டனுடனான முக்கிய வர்த்தக ஒப்பந்தம் இந்திய ஏற்றுமதிக்கு மிகப்பெரிய வாய்ப்புகளை உருவாக்குவதுடன் இந்திய விவசாயிகள், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள், மீனவர்கள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் கலைஞர்கள் செழிப்பாக வாழவழி வகை செய்யும் என மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளி யிட்ட அறிக்கை:

(i) ஜூலை 15 அமலுக்கு வரவிருக்கும் பிரிட்டனுடனான வர்த்தக ஒப்பந்தம் ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

(ii) இது '2047-இல் வளர்ச்சியடைந்த இந்தியாவை' உருவாக்கும் பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லும்.

(ii) பல்வேறு துறைகளில், குறிப்பாக தொழிலாளர்களின் பங்களிப்பு அதிகம் உள்ள துறைகளில், இந்தியப் பொருள்கள், பிரிட்டன் சந்தையில் முழுமையான அணுகலைப் பெறுவதை இந்தியா- பிரிட்டன் இடையேயான விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (சிஇடிஏ) உறுதிசெய்யும். இரு தரப்புக்கும் பயனளிக்கும் இந்த ஒப்பந்தம், வர்த்தக மதிப்பில் ஏறக்குறைய 100%-ஐ உள்ளடக்கிய சுமார் 99% வர்த்தகப் பொருள்களுக்கான சுங்க வரிகளை உடனடியாக நீக்குவதன் மூலம், இந்திய ஏற்றுமதிக்கு மிகப் பெரிய வாய்ப்புகளை உருவாக்கும்.

சிஇடிஏ ஒப்பந்தம் மூலம் மஞ்

சள், மிளகு, ஏலக்காய் மற்றும் மாம் பழக் கூழ், ஊறுகாய், பருப்பு வகை கள் போன்ற பதப்படுத்தப்பட்ட பொருள்களுக்கு பிரிட்டனில் வரி விலக்கு அளிக்கப்படும். விவசாய ஏற்றுமதிகளின் அதிகரிப்பு, விவ சாய வருமானத்தை உயர்த்துவ துடன், தரம், பேக்கேஜிங், சான்ற ளிப்பை ஊக்குவிக்கும். மேலும், இது விவசாய மதிப்புச் சங்கிலி முழுவதும் ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

(iii) அதேவேளையில், உள்நாட்டு விவசாயிகளை, குறிப்பாக பால் பொருள்கள், தானியங்கள், சிறுதானியங்கள், ஆப்பிள், ஓட்ஸ், சமையல் எண்ணெய் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களைப் பாதுகாக்க, இந்தியாவின் மிகவும் உணர்திறன் வாய்ந்த விவசாயத் துறைகள் ஒபபந்தத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளன.

(iv) பிரிட்டனின் பரந்த சந்தைக்கு உடனடி வரி இல்லா அணுகல் கிடைப்பது, இந்திய உற்பத்தித் துறையை விரைவுபடுத்தும். இதன்மூலம் திருப்பூரின் தறிகள் முதல் பெங்களூரின் ஆய்வகங்கள் வரையிலும், சூரத்தின் வைரக் கலைஞர்கள் முதல் ஹைதராபாதின் மென்பொருள் பொறியாளர்கள் வரையிலும், இந்த ஒப்பந்தம் உண்மையான பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

(v) பிரிட்டனுடனான ஒப்பந்தத்தின் ஒரு முக்கிய அம்சம் இரட்டைப் பங்களிப்பு ஒப்பந்தம் ஆகும். சிஇடிஏ ஒப்பந்தத்துடன் இணைந்து நடைமுறைக்கு வரும் இந்த முக்கிய உடன்படிக்கை, தற்காலிகப் பணிகளுக்காக பிரிட்டன் செல்லும் இந்தியப் பணியாளர்களும், அவர்களைப் பணியமர்த்தும் நிறுவனங்களும், அங்கு சமூகப் பாதுகாப்புக்கான பங்களிப்பை இருமுறை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கிறது. வெளிநாடுகளில் தற்காலிகப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்களுக்குத் தொடர்ந்து சமூகப் பாதுகாப்புப் பலன்கள் கிடைப்ப தன்மூலம், 75,000-க்கும் அதிகமான இந்தியத் தொழில்முறை நிபுணர்களுடன், 900-க்கும் மேற்பட்ட நிறுவனங்களும் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(vi) இரு பெரும் பொருளாதார நாடுகளுக்கு இடையேயான சமமான மற்றும் லட்சியமிக்க வர்த்தக ஒப்பந்தங்களுக்கு, சிஇடிஏ, ஓர்அளவு கோலாக விளங்குகிறது. புதிய இந்தியா எவ்வாறு வர்த்தகம் செய்கிறது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு எனத் தெரிவித்துள்ளார்.

14. காட்டுத்தீ நெருக்கடியின் தீவிரமும் சூழலியல் சமநிலையின் அவசியமும்.

(i) காட்டுத்தீயின் அதிகரிப்பு (2026)

- 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், கடுமையான வெப்ப அலைகள் மற்றும் வறண்ட வானிலை காரணமாக, உத்தரகண்ட், குஜராத், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு (குறிப்பாக நீலகிரி மற்றும் பார்சன்ஸ் வேலி பகுதிகளில்) உள்ளிட்ட 12-க்கும் மேற்பட்ட இந்திய மாநிலங்களில் பரவலான காட்டுத்தீ ஏற்பட்டது.
- இத்தீ விபத்துகள் அரிய வகை பறவைகள், விலங்குகள் மற்றும் மருத்துவத் தாவரங்களை அழித்தன; இதன் பாதிப்பு புயல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர்களின் அழிவுத்திறனுக்கு இணையானதாக இருந்தது.

- 2022-ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் (UNEP) அறிக்கை ஒன்றின்படி, உலகளாவிய காட்டுத்தீ நிகழ்வுகள் 2030-க்குள் 14 சதவீதமும், 2050-க்குள் 30 சதவீதமும், 2100-க்குள் 50 சதவீதமும் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

(ii) பருவநிலை மாற்றம் மற்றும் மனிதர்களின் தாக்கம்

- இயற்கையை அழிக்கும் மனித நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட "இயல்புக்கு மாறான" வெப்பமான பருவநிலையே இத்தீ விபத்துகளுக்கு முக்கிய காரணமாகும்.
- இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட காட்டுத்தீயால் அழிந்த மரங்களின் எண்ணிக்கையை விட, தற்போது இருமடங்கு அதிகமான மரங்கள் அழிவதாக தற்போதைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- விரைவான நகரமயமாக்கல் மற்றும் வனப்பகுதி ஆக்கிரமிப்பு ஆகியவை மனிதர்களுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்துள்ளன; கடந்த 30 ஆண்டுகளில் தோன்றிய புதிய நோய்களில் 60 முதல் 70 சதவீதம் வரை வனவிலங்குகளிலிருந்தே உருவானதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

(iii) கார்பன் சேமிப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆபத்து

- காடுகள் "கார்பன் சேமிப்புத் தொட்டிகளாக" செயல்படுகின்றன; ஒளிச்சேர்க்கை செயல்முறை மூலம் கிளைகள், இலைகள் மற்றும் மண் வழியாக கார்பன் டை ஆக்சைடை அவை உறிஞ்சுகின்றன.
- காடுகள் எரியும்போது, பல தசாப்தங்களாகச் சேமிக்கப்பட்ட கார்பன் உடனடியாக கார்பன் டை ஆக்சைடாக வெளியேற்றப்பட்டு, புவியின் வெப்பநிலையை மேலும் அதிகரிக்கிறது.
- 2024-ஆம் ஆண்டில் மட்டும் உலகம் 1.35 கோடி ஹெக்டேர் வனப்பகுதியை இழந்தது; இது கிரீஸ் நாட்டின் பரப்பளவை விடப் பெரியதாகும்.

(iv) இந்தியாவுக்கான அறிவியல் ஆய்வுகள் மற்றும் கணிப்புகள்

- இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் (IITM), பிட்ஸ் பிலானி (BITS Pilani) மற்றும் லுண்ட் பல்கலைக்கழகம் (Lund University) ஆகியவை இணைந்து நடத்திய ஆய்வின்படி, உமிழ்வு அளவுகளைப் பொறுத்து 2100-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் காடுகளில் கார்பன் சேமிப்பு 35 சதவீதம் முதல் 97 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- கார்பன் சேமிப்பு அதிகரிப்பது சாதகமான ஒன்றாகத் தோன்றினாலும், இத்தகைய காடுகள் வறட்சி மற்றும் காட்டுத்தீயினால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய அபாயம் உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் (IITM-ஐச் சேர்ந்த அபிதா ஃபாத்திமா மற்றும் டாக்டர் ராக்ஸி மேத்யூ கோல் ஆகியோர் உட்பட) எச்சரிக்கின்றனர்; குறிப்பாக ராஜஸ்தான், குஜராத் மற்றும் மத்திய இந்தியப் பகுதிகளில் இந்த ஆபத்து அதிகம் உள்ளது.
- காடுகளில் நடைபெறும் கார்பன் பரிமாற்றம் பெருமளவில் மழைப்பொழிவு முறைகளைச் சார்ந்தே அமைகிறது; இதன் விளைவுகள் பொதுவாக இரண்டு ஆண்டு சுழற்சி முறையில் வெளிப்படுகின்றன.

(v) தணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

- "தீ கட்டுப்பாட்டுக் கோடுகளை" (Fire Control Lines) உருவாக்குதல் – அதாவது, திடீர் காட்டுத்தீ பரவுவதைத் தடுப்பதற்காக, காய்ந்த இலைகள் மற்றும் எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் அகற்றப்பட்ட காடுகளுக்குள் உள்ள தெளிவான பாதைகளை அமைத்தல்.
- காடுகளைக் காக்க, உலகம் பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தை தீவிரமாகக் குறைப்பதோடு, புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டையும் கட்டுப்படுத்த வேண்டும்.

(vi) முடிவுரை: சூழலியல் நல்லிணக்கம்

- காடுகளைப் பாதுகாப்பது என்பது உயிரினங்கள், மரபணுக்கள் மற்றும் மனித மனதைப் பாதுகாப்பதாகும்.
- காட்டின் ஆரோக்கியமே மண்ணின் ஆரோக்கியம்; மண்ணின் ஆரோக்கியமே மக்களின் செல்வம். இயற்கையின் சீற்றத்தைத் தூண்டுவதற்குப் பதிலாக, சுற்றுச்சூழலோடு இணக்கமாக வாழ்வதே மனிதகுலத்தின் பிழைப்புக்கான ஒரே நிரந்தரத் தீர்வாகும்.

15. தமிழ்நாட்டில் நிலவும் மனநல நெருக்கடி - குறிப்பாக இல்லத்தரசிகளிடையே காணப்படும் அதிக தற்கொலை விகிதங்கள் மற்றும் தனியாக வாழும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த பார்வை.

(i) சமூக முன்னேற்றத்தில் உள்ள முரண்பாடுகள்

- சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணியில் இருப்பதாகப் பாராட்டப்பட்டாலும், பல குறியீடுகள் ஆழமானதொரு மறைமுக நெருக்கடி நிலவுவதைச் சுட்டிக்காட்டுகின்றன.
- இந்தியாவின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், குழந்தைகள் இறப்பு விகிதம் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைப்பதில் இம்மாநிலம் வெற்றிகண்டுள்ளது.
- இருப்பினும், முதியோர் மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் இளைஞர்களின் எண்ணிக்கை குறைவு ஆகியவற்றை மாநிலம் தற்போது எதிர்கொண்டு வருகிறது; இது எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க சமூகச் சவால்களை உருவாக்கும்.

(i) தனியாக வாழும் பெண்களின் பாதிப்புக்குள்ளாகும் நிலை

- இந்தியாவிலேயே கணவனை இழந்தவர்கள், விவாகரத்து பெற்றவர்கள், திருமணம் ஆகாதவர்கள் அல்லது தனியாக வசிப்பவர்கள் என வகைப்படுத்தப்படும் பெண்களின் விகிதம் தமிழ்நாட்டில்தான் அதிகமாக உள்ளது.
- "தனியாக வாழும் பெண்கள்" என்பதற்கான தேசிய சராசரி 3.6% ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் இப்புள்ளிவிவரம் 6.8% ஆக உள்ளது.
- ஆயுட்காலம் அதிகரிப்பு மற்றும் நகரமயமாக்கல் தொடர்வதால், இப்பெண்கள் - குறிப்பாக முதுமையை அடையும்போது - கடுமையான தனிமை மற்றும் சமூக விலக்கத்தை எதிர்கொள்வதாக உளவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

(ii) இல்லத்தரசிகளின் தற்கொலை நெருக்கடி

- 2024-ஆம் ஆண்டிற்கான தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகள், தமிழ்நாட்டில் உள்ள இல்லத்தரசிகள் கடும் மன அழுத்தத்திற்கு ஆளாகியிருப்பதை வெளிப்படுத்துகின்றன.
- இந்தியாவில் நடைபெறும் இல்லத்தரசிகளின் தற்கொலைகளில் 13% தமிழ்நாட்டிலேயே நிகழ்கின்றன.
- இம்மாநிலத்தில் சராசரியாக ஒவ்வொரு நாளும் ஏழு திருமணமான இல்லத்தரசிகள் தற்கொலை செய்துகொள்கின்றனர்.
- 2024-ஆம் ஆண்டில் மட்டும், தமிழ்நாட்டில் 2,821 இல்லத்தரசிகள் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டனர்.

(iii) முக்கியக் காரணங்கள்: குடும்பம் மற்றும் உடல்நலம்

- தேசிய அளவில் இல்லத்தரசிகளின் தற்கொலைகளுக்குக் குடும்பப் பிரச்சனைகள் 33.5% காரணமாக அமைகின்றன; ஆனால் தமிழ்நாட்டில் இப்புள்ளிவிவரம் 38.8% என மிக அதிகமாக உள்ளது.

- உடல்நலப் பிரச்சனைகள் மற்றும் நாள்பட்ட வலியைத் தாங்க இயலாமை ஆகியவை இம்மாநிலத்தில் இல்லத்தரசிகளின் தற்கொலைகளுக்கு 29.3% காரணமாக உள்ளன; இது 18% என்ற தேசிய சராசரியை விட மிக அதிகம்.
- பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் சிறந்த மருத்துவ வசதிகள் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் தமிழ்நாட்டில் இருந்தபோதிலும், இந்த அதிகப்படியான தற்கொலை விகிதம் தொடர்கிறது.

(iv) சமூக-பொருளாதாரக் காரணிகள் மற்றும் மன அழுத்தம்

- வரதட்சணை தொடர்பான மரணங்கள் குறைந்திருந்தாலும், தங்கள் உணர்வுகளையோ அல்லது மன அழுத்தத்தையோ வெளிப்படுத்துவதற்கான தளம் எதுவும் இல்லை என்ற உணர்வு இல்லத்தரசிகளிடையே நிலவுகிறது.
- மன உளைச்சலுக்குக் காரணமாக அமையும் காரணிகள்:
- கணவர்களின் மதுப் பழக்கம்.
- தவணை முறையில் (EMI) ஆடம்பரப் பொருட்களை வாங்குவதால் ஏற்படும் நிதி நெருக்கடி.
- தொலைக்காட்சித் தொடர்களால் ஏற்படும் எதிர்மறையான உளவியல் தாக்கங்கள்.
- வீட்டு வேலைகளுக்குக் கிடைக்கும் அங்கீகாரம் மற்றும் பாராட்டு இன்மை.
- படித்த பெண்களாக இருந்தபோதிலும், கணவரைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயப் பொருளாதாரச் சூழல்.

(v) தீர்வுக்கான பரிந்துரைகள்

- 2021-ல் 3,221 ஆக இருந்த எண்ணிக்கை 2024-ல் 2,821 ஆகச் சற்று குறைந்திருந்தாலும், தேசிய அளவில் இம்மாநிலம் தொடர்ந்து கவலைக்குரிய வகையில் முதலிடத்தில் உள்ளது.
- பெண்களுக்கெனப் பிரத்யேகமாக அதிகளவிலான உளவியல் ஆலோசனை மையங்களை அமைத்தல்.
- 'ஸ்னேகா' (Sneha) போன்ற சமூக ஆதரவு அமைப்புகளின் சேவையை விரிவுபடுத்துவது, இத்துயரமான போக்கைக் கட்டுப்படுத்துவதற்கான மிக முக்கியமான தீர்வாகும்.